# குழந்தைக் கல்வியில் உளவியலின் செல்வாக்கு (யாழ் கல்விக் கோட்டத்திலுள்ள முன்பள்ளிப் பாடசாலைகளைஅடிப்படையாகக்கொண்ட ஆய்வு)

**Radhika vimalkumar**

Radhika.dec1@gmail.com

**ஆய்வு அறிமுகம்:** மனித சமுதாய மாற்றத்திற்கும், பொருளாதார, மேம்பாட்டுக்கும் சமூக அசைவிற்கும் கல்வியே சிறந்த கருவி. கல்வியானது நுண்மதியாற்றலையும் திறன்களையும் வளர்க்கின்றது. இதனடிப்படையில் குழந்தையின் முதல் ஐந்து ஆண்டுகள் அதன் வளர்ச்சிக்கு அடித்தளமானவை. இக்கால கற்றல் நடவடிக்கையின் போதே குழந்தையானது தனது தேவைகளைச் சிறிதளவேனும் தானே நிறைவு செய்து கொள்ளும் சுயேச்சை நிலையை நோக்கி மெதுவாக முன்னேறுகின்றது. இக்கால கட்டத்தில் உடல் வளர்ச்சி, உளத்திறன்கள் விருத்தியடைதல், மனவெழுச்சி தொடர்புடைய சில துலங்கல்கள் மற்றும் சமூக வளர்ச்சி என்பவற்றை இப்பருவத்தினரிடையே அவதானிக்க முடிகின்றது. இவ்வகையில் குழந்தையின் உளவியலை மையப்படுத்திய கற்றல் செயற்பாடுகள் குறித்து குழந்தைக் கல்வியில் உளவியலின் செல்வாக்கு என்ற இவ்வாய்வானது முன்வைக்கின்றது. அவ்வகையில் குழந்தைக் கல்வியும் உளவியலும் ஒன்றோடொன்று தொடர்புடைய செயற்பாடாகக் காணப்படுகின்றது கற்றல் செயற்பாடுகளை மேற்கொள்வதற்கு உளவியல் இன்றியமையாத காரணியாக அமைகின்றது. அவ்வகையில் குழந்தைக் கல்வியில் கவனித்தல் என்பது கற்றலை முன்னெடுப்பதற்குரிய முக்கிய நிபந்தனையாக அமைகின்றது. கவனித்தல் உளவலுவுடன் இணைந்த ஒரு தொழிற்பாடாகக் காணப்படுகின்றது.கற்றல் செயற்பாட்டில் ஈடுபடும் ஓர் குழந்தையின் கற்றலுக்கான கால எல்லையை நிர்ணயிப்பதில் குழந்தையின் உளவியல் பெருமளவு செல்வாக்குச் செலுத்துகின்றது. மேலும் மனதை ஒருமுகப்படுத்தல், சிந்தித்தல், ஆராய்தல், வினாக்களை எழுப்புதல் என்பன உளக்காரணிகளோடு தொடர்புடையது.அவ்வகையில் குழந்தைக் கல்வியானது குழந்தையின் உள அறிவு அறநெறிசார் முதிர்ச்சியை ஏற்படுத்துவதனை குறிக்கோளாகக் கொண்டிருத்தல் வேண்டும்.இவ்வாறான குறிக்கோளை அடைவதற்கு குழந்தை உள ரீதியாக முதிர்ச்சியடைந்திருத்தல் வேண்டும். அவ்வகையில் இவ்வாய்வானது குழந்தைக் கல்வியில் உளவியலின் செல்வாக்கு எனும் தலைப்பில் யாழ் கோட்டத்திலுள்ள பத்து பிரதேச அபிவிருத்தி நிறுவனங்களின் கீழ் இயங்கும் முன்பள்ளிப் பாடசாலைகளில் கல்வி பயிலும் மூன்று தொடக்கம் ஐந்து வயதெல்லையைக் கொண்ட ஐம்பது குழந்தைகள் எழுமாறாகத் தெரிவு செய்யப்பட்டு இவ்வாய்வானது மேற்கொள்ளப்படுகின்றது. அவ்வகையில் ஆய்வுக்குட்படுத்தப்பட்ட முன்பள்ளிகளில் கல்வி பயிலும் குழந்தைகளின் கல்வியில் உளவியலின் முக்கியத்துவம் குறித்து இவ்வாய்வினூடாக எடுத்துரைக்கப்படுகின்றது.

**ஆய்வுக் கருதுகோள்**

1..குழந்தைகளின் உளவியல் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் கற்பித்தல் நிலையங்கள் போதிய வசதிகளை கொண்டிருக்கவில்லை.

2.தனியார் பாடசாலைகளுடன் ஒப்பிடும் போது அபிவிருத்தி நிறுவனங்களுக்கு கீழ் இயங்கும் பாடசாலைகளின் கற்பித்தல் முறைகள் திருப்தியுடையதாக இன்மை.
3.கற்றலில் ஈடுபடும் குழந்தைகளின் உள விருத்தியில் பெற்றோர் ஆசிரியர்கள் போன்றோரின் பங்களிப்பு குறைவாக காணப்படுகின்றது.

**ஆய்வு நோக்கம்**

1.தரமான கற்பித்தல் சூழலினூடாக குழந்தையின் உள விருத்தியை மேம்படுத்தல்
2.உளவியலில் தாக்கம் செலுத்தும் காரணிகளை இனங்காணல்.
3.பொருத்தமான ஆசிரியர்களின் உள்வாங்குதல்களை வலியுறுத்தல்.
4.குழந்தைகளின் உளத்தேவைகளை பெற்றோர் ஆசிரியர்கள் போன்றோருக்கு உணர்த்துதல்

என்பவற்றை நோக்காகக் கொண்டு குழந்தைக் கல்வியில் உளவியலின் செல்வாக்கு எனும் தலைப்பிலான இவ்வாய்வானது மேற்கொள்ளப்படுகின்றது.

**ஆய்வுப் பிரச்சினை**

குழந்தைக் கல்வியில் உளவியலின் செல்வாக்கு என்ற இவ்வாய்வு பிரச்சினையாக குழந்தைகளின் உளவியல் தேவைகளை பூர்த்தி செய்யும் வகையில் பாடசாலைச் சூழல் கற்பித்தல் நடவடிக்கைகள், குடும்பச் சூழல் என்பன அமையாமை குழந்தையின் உளவியலில் தாக்கத்தை ஏற்படுத்துகின்றது. இது ஆரோக்கியமான கற்றல், உள விருத்தி என்பவற்றில் பாதிப்பை ஏற்படுத்துகின்றது என்பதனை இவ்வாய்வு பிரச்சினையாகக் கொண்டுள்ளது.

**ஆய்வு வரையறை/ எல்லை**

குழந்தைப்பருவ கல்வி கல்விக்கட்டமைப்பின் அடித்தளமாக அமைகின்றது. அவ்வகையில் மூன்று வயதிலிருந்து ஐந்து வயது வரையிலான குழந்தைகளின் கல்விச் செயற்பாடுகள் கல்விச் செயற்பாடுகளில் உளவியலின் செல்வாக்கு என்பவற்றினை இவ்வாய்வு வரையறையாகக் கொண்டுள்ளது.

**ஆய்வுப் பிரதேசம்**

யாழ் கல்விக் கோட்டத்திலுள்ள பிரதேச அபிவிருத்தி நிறுவனங்களின் கீழ் இயங்கும் முப்பத்து ஒரு முன்பள்ளி பாடசாலைகளிலிருந்து பத்து பாடசாலைகளில் கல்வி பயிலும் ஐம்பது மாணவர்கள் எழுமாற்றாகத் தெரிவு செய்யப்பட்டு இவ்வாய்வானது மேற்கொள்ளப்படுகின்றது.

**ஆய்வுத்தரவுகள்**

இவ்வாய்விற்கான தரவுகள் முதல்நிலைத்தரவுகள் இரண்டாம் நிலைத் தரவுகளாகப் பெறப்பட்டுள்ளன. வினாக்கொத்து, நேர்காணல், களநிலையிலிருந்து நேரடியாக பெறப்பட்ட தரவுகள்என்பவற்றை

முதனிலைத் தரவுகளாகவும், நூல்கள் சஞ்சிகைகள், கட்டுரைகள் முதலானவற்றிலிருந்து பெறப்பட்டவற்றை இரண்டாம் நிலைத்தரவுகளாகவும் கொண்டு இவ்வாய்வு மேற்கொள்ளப்படுகின்றது

**ஆய்வு முறையியல்**

இவ்வாய்வு விபரண ஆய்வு முறை, கள ஆய்வு முறை என்பவற்றினை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்படுகின்றது. கள ஆய்வின் வடிவங்களான நேர்காணல், வினாக்கொத்து, கலந்துரையாடல், நேரடி அவதானிப்புகள் என்பவற்றின் முலம் தரவுகள் பெறப்பட்டு கள ஆய்வு முறையின் மூலம் ஆய்வு நிகழ்த்தப்படுகின்றது. ஆய்வின் தேவை கருதி ஆய்வுசார் விடயங்கள் விபரண ஆய்வு முறையினூடாக பெறப்பட்ட தரவுகள் யாவும் பகுப்பாய்விற்கு உட்படுத்தப்பட்டு ஆய்வானது மேற்கொள்ளப்படுகின்றது.

**ஆய்வு முடிவுரை**

யாழ் கல்விக்கோட்ட மட்டத்தில் இயங்கும் இப்பாடசாலைகள் சனசமூக நிலையங்கள் கிராமிய அபிவிருத்தி சங்கங்கள் தேவாலயங்கள் என்பவற்றின் உதவியின் கீழ் இயங்குவதனால் பாடசாலைச் சூழல் கற்பித்தல் முறைகள் என்பன தனியார் முன்பள்ளி கற்பித்தல் சூழலை விட ஒப்பீட்டு ரீதியாக பின்னடைவிலேயே காணப்படுகின்றது. இப்பாடசாலைகள் குழந்தைகளின் உளவியல் தேவைகளை பூர்த்தி செய்யக் கூடிய வகையில் காணப்படாமை உளக்குறைபாடுடைய குழந்தைகள் மெல்லக்கற்போர் போன்றோருக்கு விசேட கற்பித்தல் முறைகள் பின்பற்றப்படாமை குழந்தைகளின் உடல் உளத் தேவைகளை பெற்றோர் ஆசிரியர்கள் அறிந்து செய்யப்படாமை பயிற்றப்படாத ஆசிரியர்கள் கற்பித்தல் செயற்பாடுகளில் ஈடுபடல் என்பன அவதானிக்கப்பட்ட விடயங்களாகும். எனவே குழந்தைக் கல்வி முறையில் பொருத்தப்பாடுடைய கல்விச் சூழல், கற்பித்தல் முறைகள் குழந்தைகளின் உள விருத்தியை மேம்படுத்தும் வகையில் விருத்தி செய்யப்பட வேண்டுமென இவ்வாய்வினூடாக வெளிக்கொணரப்படுகின்றது.

**ஆய்வுத் தலைப்பு: குழந்தைக் கல்வியில் உளவியலின் செல்வாக்கு**
**(யாழ் கல்விக் கோட்டத்திலுள்ள முன்பள்ளிப் பாடசாலைகளைஅடிப்படையாகக் கொண்டஆய்வு)**
**1.குழந்தைக்கல்வி ஓர் அறிமுகம்**

மனித சமுதாயத்தின் மாற்றத்திற்கும், பொருளாதார மேம்பாட்டிற்கும், சமூக அசைவிற்கும் கல்வியே சிறந்த கருவி. கல்வியானது நுண்மதியாற்றலையும், திறன்களையும் குழந்தைகளிடத்தே வளர்க்கின்றது. இவ்வகையில் குழந்தையின் முதல் ஐந்து ஆண்டுகள் அதன் வளர்ச்சிக்கு அடித்தளமானவை. இதனையே குழந்தை நிலைக்கல்வி வலியுறுத்துகின்றது. இக்காலகட்டத்திலேயே குழந்தையானது தனது தேவைகளை சிறிதளவேனும் தானே நிறைவு செய்து கொள்ளும் சுயேச்சை நிலையை நோக்கி மெதுவாக முன்னேறுகின்றது. இக்கால கட்டத்தில் தீவிர உடல்வளர்ச்சி, உளத்திறன்கள் மலர்தல், மனவெழுச்சித் தொடர்புடைய துலங்கல்கள், சமூக நடத்தை என்பவற்றிலும் விருத்தி ஏற்படுகின்றது.

குழந்தையின் கற்றல் நடவடிக்கையானது விளையாட்டு முறையிலேயே பெருமளவில் முன்னெடுக்கப்படுகின்றது. புலன் தழுவிய கற்றல், அசைவுகல்வி, பாலர்கதைகள், மொழி வளர்ச்சி, நுண்ணறிவு வளர்ச்சி, இசையாக்கல் என்பவற்றை முதன்மைப்படுத்தியே கற்பித்தல் செயற்பாடானது மேற்கொள்ளப்படுகின்றது. குழந்தை மையக்கல்வியிலேயே குழந்தைகளுக்கு முழுச்சுதந்திரம்

வழங்கப்படுகின்றது. இதன் அடிப்படையில் குழந்தையின் இயல்பான வளர்ச்சிக்கு உதவும் சூழ்நிலையில் கற்பித்தல் செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுதல் வேண்டும். குழந்தையில் கற்பித்தல் முறைகள் குழந்தையின் உளவியலைத் தழுவியதாக அமையப்பெறுதல் வேண்டும் என குழந்தைக் கல்விச் சிந்தனையாளர்கள் வலியுறுத்தியுள்ளனர். அதாவது சுதந்திரமான, சுயசிந்தனை, செயலாற்றல்களை வளர்க்கக்கூடிய கல்வி குழந்தைக்கல்விச் சிந்தனையாளர்கள் தங்களது கருத்துக்களை முன்வைக்கின்றனர். அவ்வகையில் ஜோன்கென்றி பெஸ்டலோசி, மொண்டிசோரி அம்மையார், ஜொறோம் புறூளர், அஸ்பிரெட் பீனே, பிரெட்ரிக் புரோபல் போன்ற குழந்தைக்கல்வி உளவியலாளர்களும், பாரதியார், தேசிக விநாயகம்பிள்ளை, மகாத்மாகாந்தியடிகள் போன்றோரும் குழந்தை மையக்கல்விச் செயற்பாடுகள் குறித்து கருத்துக்களை முன்வைத்தள்ளனர். இவர்களின் கருத்திற்கமைய சுதந்திரமான கற்றல் நடவடிக்கைகள், குழந்தையின் உடல், உள வளர்ச்சியில் பங்களிப்பு செய்யும் வகையில் அமைதல், செயல்முறை கற்றல் நடவடிக்கைகள், விளையாட்டு முறையிலான கற்றல் நடவடிக்கைகள் குறித்தும் கருத்துக்களை முன்வைத்துள்ளனர். அவ்வகையில் குழந்தைக் கல்வியின் போது குழந்தைகளிடம் காணப்படக்கூடிய இயல்புகள் பற்றி உணர்ந்து அவற்றிற்கேற்ப கற்பித்தல் முறையை அமைத்துக் கொள்வது அவசியமாகும்.

வளர்ச்சி என்பதில் உடல் வளர்ச்சி, உள வளர்ச்சி ஆகியன இரண்டும் அடங்கும். இவை ஒன்றுடனொன்று இணைந்து நிகழ்வனவாகும். அவ்வகையில் கற்றல், கற்பித்தல் செயற்பாடு உளவியலுடன் இணைந்த சமூக விருத்தி என்பவற்றுக்கு குழந்தையின் உளமுதிர்ச்சி அடிப்படைக் காரணியாக அமைகின்றது. எனவே குழந்தை மையக்கல்விச் செயற்பாடுகள் யாவும் குழந்தையின் உளவிருத்திக்கு பங்களிப்பு செய்யக்கூடி வகையில் அமைதல் வேண்டும். தற்காலக் கல்வி குழந்தைகளது திறன்கள்,தேவைகள், ஆர்வங்கள் ஆகியவற்றுடன் தொடர்புற்று குழந்தைகளிடம் காணப்படும் சிறப்புப் பண்புகளை முழுமையாக வெளிக்கொணர முயலுகின்றது. குழந்தைக் கல்வியானது ஓர் உளவியல் விஞ்ஞானக் கலையாகக் காணப்படுகின்றது. இக்கல்வியை குழந்தை வெற்றிகரமாக்குவதற்கும் ஆரம்பக்கல்வி கற்றல் செயற்பாடுகளை இலகுவாக்குவதற்கும் உளவியல் பெருமளவு செல்வாக்கு செலுத்தகின்றது.

## 2. குழந்தைக் கல்வி முறைகளில் உளவியலின் வகிபாகம்

### 2.1 புலன் தழுவிய கற்றலும் உளவியலும்

குழந்தைக்கல்வி முறையானது புலன் தழுவிய கற்றல் செயற்பாடுகள் விளையாட்டு முறையிலான கல்வி, குழந்தைக் கதைகள், விழுமியக்கல்வி, இசையாக்கல், அசைவுக்கல்வி போன்றவற்றினை அடிப்படையாகக் கொண்டு காணப்படுகின்றது. அவ்வகையில் புலன் தழுவிய கற்றலில் கற்புலன், செவிப்புலன், முகர்ப்புலன், சுவைப்புலன், தோற்புலன் என புலன் தழுவிய கற்றல் செயற்பாடு இடம்பெறுகின்றது. இதில் கற்புலன் தழுவிய கற்றல் செயற்பாட்டில் காட்சிப் பொருட்களைப் பயன்படுத்துதல் அவசியம். கல்விப் போதனையில் ‘‘காட்சிப் பொருள்களிலிருந்து கருத்துப் பொருள்களுக்குச் செல்க’’. எனும் ஸ்பென்சரின் கூற்றுக்கிணங்க குழந்தையின் கற்புலன் அறிகை மட்டுமல்லாது தூண்டற் காரணியாக உளச் செயற்பாடு இக்கற்றலில் இணைந்துள்ளது. குழந்தயின் கற்புலச் செயற்பாட்டில் அவதானித்தல் என்ற உளக்காரணி கற்புல காரணி முறைக்கு

இன்றியமையாததாக காணப்படுகின்றது. குழந்தையின் புலன் உறுப்புகளின் விருத்தி சிறப்பாக அமையினும், உளவிருத்தி, உளத்தூண்டல்கள் சிறப்பாக விருத்தியடையாதவிடத்து பார்த்தறியும் செயற்பாட்டில் குழந்தை மெல்லக் கற்போனாகவே காணப்படும். அவ்வாறே செவிப்புலன் தழுவிய செயற்பாடுகளிலும் அதாவது சிறவர் பாடல்கள், கதைகள், கலந்துரையாடல்கள், என்பவற்றை குழந்தை முழுமையாக செவிமடுப்பதற்கு செவிப்புலன் அத்துடன் மகிழ்ச்சிகரமான மனநிலை என்பன கற்றல் செயற்பாட்டில் செல்வாக்கு செலுத்தும் மன அழுத்தங்கள், பயம்? கோபம் போன்ற எதிர்மறையான மனவெழுச்சிப் பிரச்சினைகள் இவ் செவிப்புலன் தழுவிய கற்றல் செயற்பாட்டில் நேரடியான தாக்கத்மைத செலுத்தும். மகிழ்ச்சி, அன்பு, ஆர்வம் போன்ற உளத்தூண்டுதல்கள் குழந்தைகள் முறையாக செவிமடுப்பதற்கும், வினாக்களை எழுப்புவதற்கும் உந்துதலாக அமையும். மனதை ஒருமுகப்படுத்தல், சிந்தித்தல் கற்பனை செய்தல் என்பவற்றுக்கு குழந்தையின் உளத்தூண்டல் அவசியமாகின்றது. இதேபோலவே முகப்புலன் தொடர்புடைய கற்றல் செயற்பாடுகளும் குழந்தையின் மனவெழுச்சிகளுடன் தொடர்புடையதாகக் காணப்படுகின்றது. முகர்தலுடன் இணைந்து மனவெழுச்சிகள் தூண்டப்படுகின்றன. பொருந்தாத மனங்கள் வெறுப்பையும், பயத்தையும் ஏற்படுத்தி விடுகின்றன. விரும்பக்கூடிய மனங்கள் குழந்தைக்கு மகழ்ச்சியை ஏற்படுத்துகின்றது. இதனைப்போலவே சுவைப்புலன் தழுவிய கற்றலும் உய்த்துணரும் பயிற்சி, வேறுபடுத்தும் பயிற்சி தொடர்புபடுத்தும் பயிற்சி, பழக்கப்படுத்திக்கொள்ளும் பயிற்சி முதலியவற்றை குழந்தை வளர்த்துக்கொள்ள உதவும்.

**2.2 விளையாட்டு முறைக்கல்வி**

விளையாட்டு முறைமை இக்கல்வியில் இன்றியமையாத இடத்தை வகிக்கின்றது. விளையாட்டு முயைிலான கல்வி மகிழ்ச்சியுடன் குழந்தைகள் ஈடுபடும் வேலை என்பதேயாகும். விளையாட்டு, குழந்தையின் மனவெழுச்சி இரண்டிற்கும் நெருங்கிய தொடர்பு காணப்படுகின்றது. அன்பு, இரக்கம், சகிப்புத்தன்மை என்பவை ஏற்படுவதற்கும், குழந்தை சக மாணவர்களுடன் இணைந்து செயற்படுவதற்கும் ஒருமைப்பாட்டிற்கும் வழிவகுக்கும். அத்துடன் பயம், கோபம், பொறாமை போன்ற எதிரான மனவெழுச்சிகளைக் கொண்ட குழந்தைகள் இக்கற்றல் செயற்பாடுகளில் குறைந்த அளவிலான ஈடுபாட்டினையே காட்டுவர். விளையாட்டு முறையிலான கற்றல் செயற்பாடுகளினூடாக அறவொழுக்கங்கள், கட்டுப்பாடுகள், ஆண், பெண் வேறுபாடுகள், உணர்ச்சி வெளிப்பாட்டுக்குரிய சொற்கள் போன்றவற்றை கற்றுக்கொள்வதற்கு விளையாட்டுக்கள் துணை புரிகின்றன.

**2.3.குழந்தைக்கதைகள்**

குழந்தைக் கல்வியில் குழந்தைக் கதைகள் மிகவும் வலிமைமிக்க அம்சமாக விளங்குவதற்கு காரணம் அவற்றின் வாயிலாகத் தூண்டப்பெறும் மனவெழுச்சிகளும், எதிர்பார்ப்பு இன்பமும் ஆகும். கதை அசைவுகளினூடாக குழந்தகைள் உள அசைவுகளை அனுபவிக்கின்றனர். பாத்திரங்களுடன் ஒன்றிணைத்த கற்பனை இன்பத்தையும் எளிமையான இயல்பு வாழ்க்கையையும் அனுபவிக்கின்றனர். சமூகச மயமாக்கற் செயற்பாட்டிலும், அறிகைக்கோலங்களின் வளர்ச்சியிலும் கதைகள் முன்னேற்றத்தை ஏற்படுத்துகின்றன. கதைப்புலத்தில் நிகழும் ஒருசிறிய நிகழ்ச்சி குழந்தைகளிடத்துப் பெரிய குதூகலத்தைத் தூண்டும்.

**2.4.அறக்கல்வி**

அறக்கல்வி முறையானது குழந்தைகளுக்கு அன்பு, உண்மை, பொறுமை, பகுந்துண்ணல், பிறருக்கு உதவுதல், மூத்தோருக்கு மதிப்பளித்தல் போன்ற நற்பழக்கங்களை குழந்தைகளிடத்தே ஏற்படுத்துவதுடன் உளமுதிர்ச்சியையும் குழந்தைகளிடத்து ஏற்படுத்தும். உள முதிர்ச்சியடைந்த குழந்தை அறக்கல்வி, அறநெறி சார்ந்த நற்பழக்க வழக்கங்களை உடனடியாக பழக ஆரம்பிக்கும்.

இவ்வறக்கல்வி உளவளர்ச்சிக்கு ஊக்கமளிப்பதுடன் இடப்பாடுடைய குழந்தைகளுக்கு உதவியளிக்கவும் வாய்ப்பளிக்கும். அவ்வாறே குழந்தைச் சித்திரமும் குழந்தையில் மனவெழுச்சி வெளிப்பாடுகளுக்கு உதவியளிக்கக்கூடிய ஓர் கற்றல் முறையாகக் காணப்படுகின்றது. எனவே குழந்தை மையக் கல்வியில் உளவியல் முக்கிய பங்காக அமைவதுடன் கற்றல் செயற்பாடுகள் உளவியலுடன் இணைந்ததாகவும் காணப்படுகின்றது.

**3.குழந்தையின் உளவிருத்தியில் செல்வாக்கு செலுத்தும் காரணிகள்**

**3.1 குடும்பச்சூழல்**

போசாக்கின்மையால் உடல் வளர்ச்சி குன்றுவது போல் உளவியல் தேவைகள் பூர்த்தியடையாதவிடத்து குழந்தையின் உளவளர்ச்சி குன்றிவிடும். அடிப்படை உளவியல் தேவைகளின் முக்கியத்தவத்தை வலியுறுத்தியவர்களில் ஐ.தோமஸ், பீவோஸ், சி.எம்.பிளெமின் என்போர் குறிப்பிடத்தக்கவர்கள். குழந்தையின் உளவிருத்தியில் அன்பு, காப்பு, கணிப்பு போன்றவை குடும்பத்திலுள்ளவர்களால் அதிகளவு முக்கியத்துவம் வழங்கப்பட வேண்டிய அம்சங்களாகும். சிறுவயதிற் கிடைக்கும் பாதுகாப்பிற்கேற்ப தனியாளின் உளவளர்ச்சி குழந்தைக்கு குழந்தை வேறுபடக்கூடியதாக உள்ளது. இப்பாதுகாப்பு பெரும்பாலும் தாயின் அன்பிலிருந்து தோன்றுகின்றது. குழந்தையிடத்து குடும்பத்தினரது அன்பு, அரவணைப்பு இன்றியமையாததாக காணப்படுகின்றது. அத்துடன் குடும்பத்திலுள்ளவர்கள் ஒவ்வொருவரும் ஐக்கியம், பரஸ்பர அன்பினை வெளிக்காட்டும்போது குழந்தையின் உளவளர்ச்சி சிறப்பாக அமையும். இது குழந்தையின் கற்றல் செயற்பாட்டுக்கு உறுதுணையாக அமையும். குழந்தை குடும்பத்தில் மகிழ்ச்சிகரமானதாக இருக்கும்போது பாடசாலை சூழலிலும் அச்சூழலை மகிழ்ச்சிகரமாக ஏற்றுக்கொள்ளுதல், கற்றல் செயற்பாடுகளில் ஆர்வத்துடனும், செயற்றிறனூடாக ஈடுபடுதல். சகமாணவர்களை அனுசரித்தல், அன்பு காட்டுதல் போன்ற நற்செயற்பாடுகளில் ஈடுபட முயலும்.

அத்துடன் பெற்றோர் அளவுக்கதிகமாக அன்பு காட்டம்போது குழந்தை தனது தன்னம்பிக்கையை இழந்துவிடும். அத்துடன் அளவுக்கதிகமான சுதந்திரம், தண்டனை வழங்கல், குழந்தையின் பேச்சுக்கு மதிப்பளிக்காமை, ஏனைய குழந்தைகளுடன் ஒப்பிட்டு பேசுதல் போன்றவாறான செயற்பாடுகள் குழந்தையின் உளவளர்ச்சியில் அதிகளவு தாக்கத்தை ஏற்படுத்தும். இது கற்றல் செயற்பாடுகளிலும் எதிர் விளைவையே ஏற்படுத்துவதாக அமையும். அத்துடன் குழந்தைக்கான அடிப்படைத் தேவைகள் பூர்த்தி செய்யப்படுதல் மிக அவசியமாகும். குடும்பத்தில் பெற்றோரின் பங்களிப்பு குழந்தைகளுக்கு குறைவாக அல்லது இல்லாமல் இருக்கும் சந்தர்ப்பத்தில் அதன் உளவளர்ச்சி பாதகமான தன்மையையே பிரதிபலிக்கும். குழந்தைகளை நேசிக்கும் பெற்றோர்கள் அவர்கள் எவ்வாறு இருக்கின்றார்களோ அவ்வாறே அவர்களை ஏற்றுக்கொள்ள வேண்டும். குழந்தைகளுக்கு தருணம் அளிக்காமை (விலக்கி வைத்தல்), சிறுமைப்படுத்தல், ஆதிக்கம் செலுத்துதல் போன்றவை அவர்களின் உளவியலில் பெருமளவு தாக்கத்தை ஏற்படுத்தும் என கலாநிதி ஜே.லெபர் என்ற உளவியலாளர் குறிப்பிடுகின்றார். குடும்பத்திலுள்ள பெற்றோர் மட்டுமல்லாது உடன்பிறந்தவர்கள், வயதில் மூத்தோர் என அனைவரும் குழந்தையின் நலனில் அக்கறை செலுத்துதல் வேண்டும். இது குழந்தையின் உளவளர்ச்சியில் செல்வாக்கு செலுத்தும்.

**பாடசாலைச்சூழல்**

பாடசாலைச்சூழல், ஆசிரியர்கள், கற்றல் செயற்பாடுகள் அனைத்தும் குழந்தையின் உளவியலைத் தழுவியதாக அமைந்திருத்தல் வேண்டும். பாடசாலை சூழல் குழந்தைக்கு பயத்தையோ, வெறுப்பையோ ஏற்படுத்தாதவாறு அமைந்திருத்தல் வேண்டும். முறையான கட்டிட வசதி

சுகாதார வசதிகள், வெளிச்சம், காற்றோட்டம் என்பன கிடைக்கக்கூடியவகையிலும், விளையாடுவதற்கு போதுமானளவு இடவசதியைக் கொண்டுள்ளதாகவும் இருத்தல் வேண்டும். அத்துடன் பாடசாலைச்சூழல் சனப்புழக்கம் உள்ள இடங்களை அண்டி அமைக்கப்படுதல் வேண்டும். பாடசாலைக் கட்டிடங்கள் முழுமையாக பூரணப்படுத்தப்படாததாகவும், பாழடைந்த வீடுகள் அல்லது கட்டிடங்களாக அல்லாமல் புதியதாக கட்டப்பட்டதாகவும், நேர்த்தியானதாகவும்,அலங்காரங்கள் மிக்கதாகவும் அமைந்திருப்பதுடன் பாடசாலையின் உள்ளே போதுமானளவு இடவசதிகளையும் கொண்டிருத்தல் வேண்டும். அத்துடன் சுத்தமான நீர், மற்றும் மலசலகூட வசதிகள் கட்டாயமாக இருத்தல் வேண்டும். அத்துடன் குழந்தைகளுக்கென பயன்படுத்தப்படும் தளபாடங்கள், ஏனைய உபகரணங்கள் பொருத்தப்பாடுடையதாக காணப்படுதல் வேண்டும். உடல் உணர்ச்சிப் பயிற்சி உபகரணங்கள், கல்வி அறிவுப்பயிற்சி உபகரணங்கள் என்பன குழந்தைக்கு ஏற்றவகையில் அமைந்திருத்தல் வேண்டும். இப்பாடசாலைச்சூழல் குழந்தையின் மனவெழுச்சிகளை பூர்த்தி செய்யக்கூடிய வகையில் அமையாதவிடத்து குழந்தை பாடசாலையில் எதிர்மறையான மனவெழுச்சி துலங்கல்களையே வெளிப்படுத்தும்.அத்துடன் குழந்தைகளின் உளவளர்ச்சியில் ஆசிரியர் குறிப்பிடத்தக்க பங்கினை செலுத்துகின்றார். சிறந்த அசிரியர் ஒருவர் உளவியலாளராகவும் இருத்தல் வேண்டுமென குறிப்பிடப்படுகின்றது. ஓர் சிறந்த ஆசிரியர் பாடத்தின் பின்னணி, அதன் தேவை, குழந்தையின் இடர்பாடுகள், திறன், திறமைகள் என்பவற்றை கணிப்பிடக்கூடியவராகவும், உதவக்கூடியவராகவும் திகழ வேண்டும். குழந்தகைளுக்கு அன்பு, காப்புத் தேவைகளை பாகுபாடற்ற முறையில் வழங்குதல் ஆசிரியரின் கடமையாகும். சாதி, மதம், இனம், ஆண், பெண் வேறுபாடு என்றவகையில் குழந்தைகளை வேறுபடுத்தக்கூடாதென ஆசிரியர் அறிய வேண்டிய உளநூல் ஞானம் குழந்தைகளின் உள்ளத்தைப் பற்றிய அறிவே என கலாநிதி முத்துலிங்கம் தனது கல்வி உளவியல் என்ற நூலில் குறிப்பிட்டுள்ளார்.

குழந்தையின் கணிப்புத் தேவையில் அதன் ஒவ்வொரு செயலிலும் ஆசிரியர் அவதானமாக இருக்கிறார், அதன் செயலை அங்கீகரிக்கிறார், திறனாகச் செயலை செய்கின்றதனால் பாராட்டுவார் போன்ற கருத்துக்களைக் குழந்தையின் உள்ளத்தில் வேரூன்றச் செய்தல் வேண்டும் என உளவியலாளர் மொறிசன் குறிப்பிடுகின்றார். குழந்தைகளைப் புரிந்து கொள்ளல், அவர்களின் நடத்தைக் கோலங்களை விளங்கிக் கொள்ளல், உடல், உளத்தேவைகளை இனங்காணல் மனப்பாங்கு விருத்தி என்பவற்றில் ஆசிரியரின் பங்கு இன்றியமையாதது. 'குழந்தையின் பாடசாலைச்சூழலில் அன்பு, கணிப்புத் தேவைகள் ஆசிரியரினால் பூரணமாக பூர்த்தி செய்யப்படாதவிடத்தும், பாரபட்சம் பார்த்தல், குழந்தைகளின் கருத்துக்களை செவிமடுக்காமை, அவர்களின் தேவைகளை உணராமை, தண்டனை வழங்குதல், இனிமையான வார்த்தைப் பிரயோகங்களை பிரயோகிக்காமை என்பன பாடசாலைச்சூழலில் குழந்தையின் உளத்தாக்கங்களுக்கு காரணமாக அமையும். அழுதல், எதிர்ப்பூட்டுதல், மலசலம் கழித்தல் போன்ற எதிர்மறையாக செயற்பாடுகளை குழந்தையானது வெளிப்படுத்தும். எனவே ஆசிரியரின் முழுமையான அங்கீகாரம் குழந்தையின் கற்றல் செயற்பாடுகளிலும் வெற்றியளிக்கக்கூடியதாகக் காணப்படுத்.

**சமூகச்சூழல்**

குடும்பச்சூழல், பாடசாலைச்சூழல் என்பவற்றைப் போலவே சமூகச்சூழலும் குழந்தையின் உளவியலில் செல்வாக்கு செலுத்தும் காரணியாக அமைகின்றது. ஆரோக்கியமான சமூகச்சூழல் குழந்தையின் உளவளர்ச்சிக்கும், சமூக வளர்ச்சிக்கும் வழிவகுக்கக்கூடியதாக அமையும். சமூகத்தில் அங்கத்தவர்கள் குழந்தயின் குடும்பச்சூழலில் காணப்படுகின்ற குறைவுபாடுகளை முன்னிலைப்படுத்தி

அக்குழந்தையை விலக்கி வைத்தல், பாரபட்சம் காட்டுதல், முறையற்ற வார்த்தைப் பிரயோகங்களை பயன்படுத்தல், ஒப்பிட்டு பேசுதல், போன்ற செயற்பாடுகளினால் உளவியல் ரீதியாக குழந்தையானது பாதிக்கப்படும். மாறாக சமூகத்திலுள்ளவர்கள்குழந்தையை முறையாக அங்கீகரித்து அதற்கு தேவையான அன்பு, காப்பு, களிப்புத் தேவைகளை வழங்குவதனூடாக குழந்தையின் உளவிருத்தியினூடாக ஆளுமை விருத்தியும் மேம்படும். தன்னம்பிக்கை வளருவதுடன் சுயமதிப்பும் ஏற்படும். இது குழந்தையின் உள ஆரோக்கியத்தில் பெரிதும் செல்வாக்கு செலுத்தும் குழந்தையின் உளவளர்ச்சி, ஆளுமை வளர்ச்சி அதன் கல்வியில் பெருமளவு செல்வாக்கினை செலுத்தக் கூடியதகக் காணப்படும்.எனவே குடும்பச்சூழல், பாடசாலைச்சூழல் குழந்தையின் உளவிருத்திக்கும்,கற்றலுக்கும் ஏற்புடையதாக அமைதல் வேண்டும்.

**4. யாழ் கல்விக் கோட்டத்திலுள்ள முன்பள்ளி பாடசாலைகளின் கல்விச் செயற்பாடுகளும் குழந்தைகளின் உளவியலும்**

**4.1 தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளின் பாடசாலைச்சூழல்,**

குழந்தைக் கல்வியின் உளவியலின் செல்வாக்கு என்ற இவ்வாய்வு யாழ் கோட்டக்கல்விப் பகுதியின் பிரதேச அபிவிருத்தி நிறுவனங்களின் கீழ் இயங்கும் முன்பள்ளி பாடசாலைகள் ஆய்விற்காக தெரிவு செய்யப்பட்டவையாகும். இப்பாடசாலைகள் குழந்தைகளின் கற்றல் நடவடிக்கைகளிலும், உளவியலிலும் எவ்வாறான மாற்றத்தை ஏற்படுத்துகின்றது என நோக்கின், கல்விப் புலத்தில் பெருமளவு வளர்ச்சியை கண்டுள்ள பிரதேசமாக காணப்பட்டாலும் தனியார் முன்பள்ளிகள், ஏனைய பிரதேசங்கள், மற்றும் வெளிநாடுகளுடன் ஒப்பிட்டு நோக்கும்போது குழந்தயின் உளவளாச்சிக்கு ஏற்ற ஆரோக்கியமான சூழல் ஆய்வுக்குட்படுத்தப்பட்ட பாடசாலைகளில் காணப்படாமை அவதானிக்கப்பட்டள்ளது. இதில் பாடசாலைச் சூழல், கற்றலுடன் தொடர்புடைய, தளபாடங்கள்,ஏனைய வசதி வாய்ப்புக்கள் என்பவற்றினை நோக்கின் அவற்றின் தரம் போதுமானதாக காணப்படவில்லை. பாடசாலைச்சூழல் பாதுகாப்பற்ற இடங்களில் அமைந்துள்ளமையும், முறையான கட்டிட வசதிகள், மகிழ்ச்சிகரமான கற்றல் சூழலை ஏற்படுத்தக்கூடிய வகையில் கட்டிட அமைப்பு முறைகள், அலங்காரங்கள் என்பன முறையாக இன்மை அவதானிக்கப்பட்டுள்ளது. அத்துடன் போதுமான இடவசதி, நீர், மலசலகூட வசதிகளும் இப்பாடசாலைகளில் குழந்தைகளுக்கு ஏற்றவகையில் அமைக்கப்படவில்லை. அத்துடன் இரைச்சல்கள் மிக்க இடப்பகுதிகளில் உதாரணமாக ரயில் பாதைகளுக்கு அருகாமையிலும் இப்பாடசாலைகள் இயங்கிக் கொண்டிருக்கின்றதை அவதானிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் யாழ்ப்பாணத்திலுள்ள தனியார் முன்பள்ளிப் பாடசாலைகளுடன் ஒப்பிடும்போது பிரதேச அபிவிருத்தி நிறுவனங்களின் கீழ் இயங்கும் இப்பாடசாலைகள் பல்வேறுபட்ட குறைபாடுகளுக்கு உட்படுத்தப்பட்டவையாகவே காணப்படுகின்றன. கற்றல் செயற்பாடுகளுக்கமைய சிறந்த, பொருத்தமான தளபாடங்கள், ஏனைய கற்றல் உபகரணங்கள் அத்துடன் புலக்காட்சியினூடான கற்றலுக்குத் தேவையான நவீன உபகரணங்கள் போன்றவை இன்மையும் அவதானிக்கப்பட்டுள்ளது. அத்துடன் இப்பாடசாலைகள் குறைந்தளவிலான வசதி வாய்ப்புக்களுடன் இயங்குபவையாகவும் காணப்படுகின்றன. குழந்தைக் கல்விமுறையில் விளையாட்டு முறைமை இன்றியமையாத ஒன்றாகும்.

இருப்பினும் விளையாட்டுமுறையான கற்பித்தல் செயற்பாடுகளை மேற்கொள்வதற்கு போதுமான உபகரணங்கள் இடவசதி என்பவை இன்மை அவதானிக்கப்பட்டுள்ளது. குழந்தைகளுக்கான விளையாட்டுப் போட்டிகளும் இடப்பற்றாக்குறைவு, மைதான வசதிகளின்மை போன்ற காரணங்களினால் வேறு பாடசாலை மைதானங்களை பயன்படுத்துவதனையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

இவ்வகையான முறையற்ற பாடசாலை சூழல் குழந்தைகளின் கற்றல் செயற்பாடுகளுக்கு உகந்தவையாக அமைவதில் பெருமளவு தாக்கங்களை ஏற்படுத்தும். அத்துடன் கற்றல் செயற்பாட்டுக்கு குழந்தையின் உளவளர்ச்சி மிகவும் இன்றியமையாதது. பொருத்தமற்ற கற்றல் சூழ்நிலை குழந்தைகளில் நேரான மனவெழுச்சி வளர்ச்சிகளுக்கு மாறாக எதிரான மனவெழுச்சி வெளிப்பாடுகளையே அதிகளவு வெளிப்படுத்துவதாகக் காணக்கூடியதாக உள்ளது. பாடசாலைச்சூழல் பெருமளவான குழந்தைகளுக்கு கோபம், பயம், பதற்றம், சலிப்புத்தன்மை போன்ற மனவெழுச்சிகளையே ஏற்படுத்துவதாக அமைகின்றது. ஆய்விற்குட்படுத்தப்பட்ட பத்து பாடசாலைகளிலிருந்து தெரிவு செய்யப்பட்ட ஐம்பது குழந்தைகளில் பெரும்பாலானோர் உளவியல் ரீதியாக போதுமானளவு தேர்ச்சியை கொண்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டுள்ளது. மகிழ்சிச்சிகரமான மனநிலையை அனைத்து மாணவர்களிடமிருந்தும் அவதானிக்க முடியவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. எனவே பாடசாலைச்சூழல் குழந்தையின் உளவியலில் பெருமளவு செல்வாக்கினை செலுத்தும் காரணியாக அமைவதனால் பொருத்தமான, ஆரோக்கியமான சூழலை உருவாக்குதல் குழந்தையின் உளவளர்ச்சியை மேம்படுத்துவதுடன் அது கற்றலுக்கும் எதிர்கால வாழ்க்கைக்கும் உதவுபவையாகக் காணப்படுமென்பதில் எவ்வித ஐயமுமில்லை.

### 4.2 ஆசிரியர்களும், கற்பித்தல் முறைகளும்

ஆய்வுக்குட்படுத்தப்பட்ட முன்பள்ளிப் பாடசாலைகளில் கற்றல், கற்பித்தல் செயற்பாடுகளின்போது அவதானிக்கப்பட்ட விடயமானது குழந்தைக்கல்வி முறைக்கு பொருத்தமற்ற, பயிற்றப்படாத ஆசிரியர்களில் மூலம் கற்பித்தல் செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றமை அவதானிக்கப்பட்டுள்ளது. குழந்தையின் உளவியல் தேவைகளை அறிந்து, அவர்களின் உளவளர்ச்சிக்கான கற்பித்தல் மறைகளை மேற்கொள்ளக்கூடியவகையில் பெரும்பாலான ஆசிரியர்கள் காணப்படாமை இங்கு குறிப்பிடத்தகக்கது. அத்துடன் இக்கல்வி நிலையங்களில் ஆசிரியர்களுக்கான பயிற்சிகள் வழங்கப்படாத நிலையில் தகைமை குறைந்த ஆசிரியர்கள் உள்வாங்கப்படுகின்றமையும் அவதானிக்கப்பட்டுள்ளது. குழந்தைக்கல்வி ஆசிரியரானவர் தாயின் பண்புகளைக் கொண்டிருத்தல் வேண்டுமென்பதற்கான காரணம் குழந்தைகளில் உளத்தேவைகளை அறிந்து அவர்களின் உளமுதிர்ச்சி தன்மைகளுக்கு ஏற்ப கற்பித்தல் செயற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும் என்பதற்காகவேயாகும். அத்துடன் பெரும்பாலான பாடசாலைகள் ஒரு ஆசிரியரை மட்டும் கொண்டு இயங்குபவையாகவும் ஆசிரியர் வேறு தேவைகள் கருதி செல்லும்போது பாதுகாப்பற்ற சூழ்நிலை குழந்தைகளுக்கு ஏற்படுவதும் அவதானிக்கப்பட்டுள்ளது. அத்துடன் ஆசிரிய உதவியாளர்களாக தரம் குறைந்த ஆசிரியர்கள் ஈடுபடுவதும் அவதானிக்கப்பட்டுள்ளது. அத்துடன் கற்பித்தல் செயற்பாடுகளாக குழந்தைக் கல்வியில் வேறுபட்ட முறைகள்பின்பற்றப்பட வேண்டும் என முற்குறிப்.பிடப்பட்ட அத்தியாயங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது. எனினும் இவ்வாய்விற்குட்படுத்தப்பட்ட பாடசாலைகளின் மேற்குறிப்பிடப்பட்ட எல்லா கற்பித்தல் முறைகளும் வழங்கப்படாமை அவதானிக்கப்பட்டுள்ளது. பெரும்பாலும் எழுத்துப்பயிற்சி, கதைகள், பாடல்கள் பெருமளவில் கற்பித்தல் செயற்பாடுகளில் பயன்படுத்துவதுடன் குழந்தைகளின் உளவளர்ச்சி, கற்பனைத்திறன் போன்றவை வெளிப்படுத்தக்கூடிய வகையிலும், மனவெழுச்சிகளை வெளிப்படுத்துவதற்குரிய சிறந்த காலமாக

அமையப்பெறவில்லையென்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. இவ்முன்பள்ளிப் பாடசாலைகளில் பெரும்பாலும் குறைந்த, நடுத்தர வருமான வகுப்பு குடும்பங்களிலுள்ள குழந்தைகள் கற்றல் செயற்பாடுகளில் ஈடுபடுவதனால் உள ரீதியான விருத்தியை ஏற்படுத்தும் வகையில் கற்றல்,கற்பித்தல் செயற்பாடுகள் அமைவதோடு, குழந்தையின் உளவிருத்தியினூடாக கற்றலை சிறப்பாக மேற்கொள்ளக்கூடிய நிலை ஏற்படுத்தப்படல் அவசியமாகும்.

### 4.3 குழந்தைகள் எதிர்நோக்கும் பிரச்சினைகள்

ஆய்வுக்குட்படுத்தப்பட்ட பத்து பாடசாலைகளிலிருந்து எழுமாற்றாக தெரிவு செய்யப்பட்ட ஐம்பது மாணவர்களில் 20மூ மானோர் உளரீதியான தாக்கங்களுக்கு உட்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டுள்ளது. குழந்தைகளின் உடல், உளத்தேவைகள் பூரணமாகப் பூர்த்தி செய்யப்படாமை பாடசாலைச்சூழல், கற்பித்தல் முறைகள் எல்லா குழந்தைகளுக்கும் ஏற்புடையதாக அமையாமை, குழந்தையின் உளவளர்ச்.்.சியில் பெற்றோரின் பங்களிப்பு போதுமானதாக இன்மை என்பனவும் குழந்தைகள் உளவியல் ரீதியான பின்னடைவிற்கான காரணங்களாக காணப்படுகின்றன. அத்துடன் குடும்ப அங்கத்தவர்களின் எதிர்மறையான செயற்பாடுகளும் குழந்தை விட்டுக் கொடுக்காமை, ஒற்றுமையற்ற தன்மை பொறாமை, கோபம், பதகளித்தல், போன்ற உணர்வுகளுக்கு உளள்ாவதும் இவ்வாய்வினூடாக அவதானிக்கபப்ட்டுள்ளது. அத்துடன் அதிகளவிலான பிள்ளைகளைக் கொண்ட குடும்பங்களிலுள்ள குழந்தைகளும் தங்களுடைய தேவைகள் முழுமையாக பூர்த்தியடையாத நிலையில் பாடசாலை கற்றல் நடவடிக்கைகளிலும் பின்தங்கியவர்களாகவே காணப்படுகின்றனர். அத்துடன் பெற்றோரிடையே மனக்கசப்பு, உறவுச்சிக்கல், புரிந்துணர்வின்மை, விட்டுக்கொடுக்கம் மனப்பான்மையின்மை போன்றனவும் ஆய்விற்குட்படுத்தப்பட்ட குழந்தைகளின் உளவிருத்தியில் பாதிப்பை ஏற்படுத்துகின்றனவாக காணப்படுகின்றன. அத்துடன், குடும்பச்சூழற் காரணிகளால் சமூகத்திலுள்ளவர்கள் குழந்தைகளை அங்கீகரிக்காமை, அன்பு காட்டாமை என்பனவும் இக்குழந்தைகள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளாகக் காணப்படுகின்றன. இவற்றினால் குழந்தையின் கற்றல் செயற்பாடுகளும் ஆரோக்கியமான உளவளர்ச்சியுடன் ஒப்பீட்டளவில் குறைந்தளவிலேயே காணப்படுகின்றமை அவதானிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் அதிகளவிலான பிள்ளைகளைக் கொண்ட குடும்பங்களிலுள்ள குழந்தைகளும் தங்களுடைய தேவைகள் பூர்த்தியடையாத நிலையில் உள, ஆளுமை குறைபாடுகளுக்கு உட்பட்டவர்களாகவும் காணப்படுகின்றனர்.அத்துடன் பெற்றோரிடையே மனக்கசப்பு, உறவுச்சிக்கல் புரிந்துணர்வின்மை போன்றவையும் ஆய்விற்குட்படுத்தப்பட்ட குழந்தைகளின் உள விருத்தியில் பாதிப்பை ஏற்படுத்துகின்றனவாக காணப்படுகின்றன. அத்துடன் குடும்பச் சூழற் காரணிகளினால் சமூக கணிப்புகள் குறைவடைவதும் குழந்தை ஆளுமை பிரச்சினைகளுக்கு உள்ளாகின்றமையும் குறிப்பிடத்தக்கதாகும். எனவே யாழ் கல்விக்கோட்டத்திலுள்ள தனியார் முன்பள்ளி நிலையங்களில் கல்வி பயிலும் குழந்தைகளையும் விட ஒப்பீட்டளவில் உடல் உள ஆளுமை வளர்ச்சியல் குறைபாடுள்ளவர்களாகவே காணப்படுகின்றனர்.

முடிவுரை

குழந்தைக் கல்வியானது தொடர்நிலை கல்விக்கான முதற்படியாக அமைவதால் இன்றைய காலகட்டத்தில் அதன் முக்கியத்துவம் வலியுறுத்தப்பட்டு வருகின்றமையை காணக்கூடியதாக உள்ளது.குழந்தைக் கல்வியில் உளவியலின் செல்வாக்கு என்ற இவ்வாய்வானது குழந்தையின்

உளவிருத்திக்கேற்ப கல்வி கல்விச்சூழல் ஏனைய காரணிகள் என்பற்றை ஒழுங்கமைத்து மேற்கொள்வதனை வலியுறுத்துகின்றது.அவ்வகையில் ஆய்விற்குட்படுத்தப்பட்ட பிரதேசமான யாழ் கல்விக்கோட்டப் பகுதியில் உள்ளடங்குகின்ற தனியார் மயப்படுத்தப்படாத முப்பத்தொரு பாடசாலைகளிலிருந்து எழுமாற்றாகத் தெரிவுசெய்யப்பட்ட பத்து பாடசாலைகளும் அவற்றில் கல்விபயிலும் ஐம்பது குழந்தைகளையும் ஆய்விற்குட்படுத்தி அவதானிக்கப்பட்ட விடயங்களிலிருந்து பாடசாலைச் சூழல் குழந்தையின் ஆரோக்கியமான உளவளர்ச்சிக்கும் மகிழ்ச்சிகரமான கற்றலுக்கும் யாழ்ப்பாணப் பகுதிகளில் இயங்கும் தனியார் பாடசாலைகளுடன் ஒப்பிடும் போது பின்னடைவே எடுத்துக்காட்டுகின்றது.கற்றல் செயற்பாடுகளுக்கான உபகரணங்கள், விளையாட்டுப் பொருட்கள், தளபாடங்கள், சுகாதார வசதிகள் யாவும் தரமானதாகவும் போதுமான வசதிகளையும் கொண்டிருக்கவில்லை.அத்துடன் இப்பாடசாலைகள் பிரதேச அபிவிருத்தி நிறுவனங்கள் சனசமூக நிலையங்கள் கிராம மட்ட அபிவிருத்தி சங்கங்கள் தேவாலயங்கள் என்பற்றின் உதவியுடன் இயங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. எனவே குறைந்நளிலான வசதிவாய்ப்புகளுடன் இயங்கி வரும் இப்பாடசாலைகள் குழந்தைகளின் கற்பனைத் திறன் ஆளுமைத்திறன் நேரான மனவெழுச்சி வெளிப்பாடுகள் என்பவற்றுக்கு ஒப்பீட்டளவில் குறைந்தளவிலான பங்களிப்பையே செலுத்தி வருகின்றது.அத்துடன் குழந்தையின் உளவிருத்தியை மேம்படுத்தக் கூடிய வகையில் நவீன கற்றல் கற்பித்தல் செயற்பாடுகள் பின்பற்றப்படாமையும் இங்கு குறிப்பிடத்தக்க விடயமாகும்.குழந்தையின் ஆளுமை விருத்திக்கு முறையான கற்பித்தல் முறைகள் இன்றியமையாததாகும். அத்துடன் ஆய்விற்குட்படுத்தப்பட்ட பாடசாலைகளில் கல்விகற்கும் பெரும்பாலானோர் வறுமை நடுத்தர வருமான வகுப்பினரின் குழந்தைகளாக காணப்படுவதால் பெற்றோர்களினால் அவர்களின் தேவைகள் பூரணமாக பூர்த்தி செய்யப்படாமையும் குடும்பப் பிரச்சினைகள் பெற்றோரின் அன்னியோன்னியத் தொடர்பின்மை என்பவற்றினால் அவர்களுக்குத் தேவையான அன்பு காப்பு கணிப்புத் தேவைகள் வழங்கப்படாமையும் குழந்தைகள் உள தாக்கங்களுக்கு உட்பட்டிருந்தமை அதானிக்கப்பட்டுள்ளது.அத்துடன் பயிற்றப்படாத ஆசிரயர்கள் கற்பித்தல் செயற்பாடுகளில் ஈடுபடுதல் குறைந்தளவிலான ஆசிரியர்கள் குறிப்பாக ஒரு பாடசாலையில் ஒரு ஆசிரியர் மட்டும் கடமைப்புரிகின்ற நிலை காணப்படுகின்றது. இதனால் குழந்தைகளை தனிப்பட்ட நிலையில் அவதானித்தல் உதவுதல் அவர்களுக்கான பாதுகாப்பை வழங்கல் என்பவற்றில் இடர்பாடுகளுக்கு உள்ளாகின்றனர்.அத்துடன் பொருத்தமற்ற பாடசாலைச் சூழலும் குழந்தைகளின் உள ஆரோக்கியத்தில் தாக்கங்களை செலுத்துகின்றது.

எனவே ஆயிவிற்குட்படுத்தப்பட்ட பாடசாலைகளின் தரம் கற்பித்தல் செயற்பாடுகள் பெற்றோர் ஆசிரியர்களின் பங்களிப்பு என்பன யாவும் குழந்தையின் உளவிருத்தியை மேம்படுத்தக்கூடிய வகையில் அமைதல் வேண்டும். உளவிருத்தி குழந்தையின் அறிவு ஆளுமை கற்பனைத்திறன் என்பவற்றின் விருத்திக்கு அடித்தளமாக அமையும். எனவே பாதுகாப்பான புதிய கட்டிடம் மலசலகூட வசதிகள் குடிநீர் வசதிகள் என்பவற்றினை கொண்ட பாடசாலைச் சூழலை உருவாக்கல் வேண்டும்.அத்துடன் குழந்தைகளுக்கு பொருத்தமான அலங்காரங்கள் தளபாட கற்றல் உபகரணங்கள் பயன்படுத்தப்பட வேண்டும். அத்துடன் பயிற்றப்பட்ட ஆசிரியர்களின் உள்வாங்கல்களும் இடம்பெற வேண்டும். குழந்தைகளின் உளவிருத்தியில் பெற்றோரின் பங்களிப்பை எடுத்துணர்த்துவதற்கான விழிப்புணர்வு நடடிக்கைகளும் மேற்கொள்ளப்பட வேண்டும்.இவ்வாறான செயற்பாடுகளுக்கு அரச அரச சார்பற்ற நிறுவனங்கள் முழுமையான பங்களிப்பினை செலுத்துவதூடாக ஆளுமை மிக்க சமுதாயத்தை உருவாக்க இது ஓர் அடிப்படையான காரணியாக அமையும்.

**உசாத்துணை நூல்கள்**

1.கனகசபாபதி. க, 1986, பாலர் கல்வியும் விஞ்ஞான அணுகுமுறையும், பாலர் கல்விக்கழகம் யாழ்ப்பாணம்.

2.குமாரசாமி சோமசுந்தரம், 1995, மனித விழுமியங்கள், ரஜி வெளியீடு, கொழும்பு.

3.சந்தானம். எஸ், கணபதி.வி 2002, கல்விசார் அறைகூவல்கள், சந்தா பப்ளிஷர்ஸ், முத்துவிழா இல்லம், சென்னை.

4.தயா சோமசுந்தரம், சிவயோகன். சா, 2000, தமிழ் சமுதாயத்தின் உளநலம், சாந்தியகம் கச்சேரி நல்லூர், யாழ்ப்பாணம்.

5.நாகமுத்து தணகாசலம்பிள்ளை 1998 கல்வியியற் சிந்தனைகள் தணிகைப் பதிப்பகம் இல 672 யாழ்ப்பாணம்.

6.பாலசுப்பிரமணியம் தனபாலன். நவீன பாலர் கல்விச் செல்நெறிகள், 2002, தேசியகல்வியியல் கல்லூரி, யாழ்ப்பாணம்.

7.ஆனந்தராஜா. ச, 2003, அன்புக்கரங்கள், கலை இலக்கிய நண்பர்கள் வட்டம், வவுனியா.

8.ஜெயராசா. சுபா, 1995, பாடசாலையும் கலைத்திட்டமும், ஸ்ரீசாயி அச்சகம், காங்கேசன்துறை வீதி இணுவில்.

9.ஜெயராசா. சுபா, 2001, குழந்தைக் கல்விச் சிந்தனைகள், போஸ்கோ வெளியீடு, நல்லூர் யாழ்ப்பாணம்.

10.முத்துலிங்கம். ச, 1983, கல்வியியல், கீதாஞ்சலி, நல்லூர் யாழ்ப்பாணம்.